# காஞ்சிபுரத்தில் இலவச கண்சிகிச்சை மருத்துவ முகாம்

காஞ்சிபுரம், ஏப்.14-

காஞ்சிபுரத்தில் இலவச கண்சிகிச்சை மருத்துவ முகாம் நடந்தது.இதில் ஏராளமானோர் பயனடைந்தனர்.

காஞ்சிபுரத்தில் விஸ்வகர்ம சனாதன தர்ம அறக்கட்டளை மற்றும் ஒய்.ஆர்.எஸ்.கே மெடிக்கல் பவுண்டேஷன் உடன் மைலாப்பூர் உதி கண் மருத்துவமனை இணைந்து காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் 16 கால் திருமண மண்டபத்தில் இலவச மருத்துவ முகாம் நடந்தது. இதில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு இலவச கண் சிசிச்சை மற்றும் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது.



காஞ்சிபுரத்தில் விஸ்வகர்ம சனாதன தர்ம அறக்கட்டளை மற்றும் ஒய்.ஆர்.எஸ்.கே மெடிக்கல் பவுண்டேஷன உடன் மைலாப்பூர் உதி கண் மருத்துவமனை இணைந்து காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் 16 கால் திருமண மண்டபத்தில் இலவச மருத்துவ முகாம் நடந்தபோது எடுத்தபடம்.

விஸ்வகர்ம சனாதன அறக்கட்டளையின் தலைவர் டாக்டர் டி.முருக செல்வம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்தார். மேலும் திருவண்ணாமலை சீனந்தல் மடாதிபதி ஸ்ரீ சிவ.சிவராஜ சுவாமிகள் தலைமை தாங்கினார். மற்றும் இம்முகாமிற்கு காஞ்சிபுரம் அறக்கட்டனை உறுப்பினர் சிற்பி ஆராதாகிருஷ்ணன் மற்றும் சென்னை ஜி.விஸ்வநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். காஞ்சிபுரம் மாவட்ட பொறுப்பாளர் எஸ்.ஜகன்னாதன் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து இருந்தார்.